தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2021

**10 வயதுப்பிரிவு**
(01.01.2011 – 31.12.2011 வரையில் பிறந்தோர்)

## ஈகைப்பேரொளிகள்

சாவு என்பதே மிகக் கொடுமையானது என்று தெரிந்திருந்தும், தமிழீழத்தில் நடைபெறும் தமிழின அழிப்பிலிருந்து தமிழ் மக்களைக் காப்பாற்ற எதுவுமே செய்ய முடியாத நிலையில், அதனை நிறுத்தக்கோரி இந்திய அரசிடமும் அனைத்துலக நாடுகளிடமும் நீதிகேட்டு, தன்னினத்திற்காகத் தங்களைத் தீயில் ஆகுதி ஆக்கியவர்கள் ஈகைப்பேரொளிகள்.

தமிழினம் வாழத் தமிழகத்தில் 1995ஆம் ஆண்டு அப்துல் ரவூப் என்ற உணர்வாளன் முதல் செந்தில்குமரன் வரை தமிழகம், மலேசியா, சுவிற்சர்லாந்து ஆகிய இடங்களில் இருபத்தைந்து ஈகையர்கள் தமிழீழ விடுதலைக்காகத் தம்மை ஈகம் செய்துள்ளனர்.

'தமிழீழத்தில் எமது உறவுகள் செத்துமடிவதைப் பார்த்துக் கொண்டு இருக்காதீர்கள். அவர்களைக் காப்பாற்றுங்கள்' என்று முழக்கம் இட்டபடி தன்னைக் கொடுத்தார் முத்துக்குமார்.

தாயகத்தில் தமிழினம் நாளும் பொழுதுமாய்த் துடிதுடித்து, சாவின் மடியில் வீழ்கையில், இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்தக்கோரி, ஐ.நா. முற்றத்தில் தன் உடலில் தீமூட்டினார் முருகதாசன்.

"தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். தமிழர்களின் உரிமையை வென்றெடுக்க வேண்டும்" என்ற வேண்டுகோளுடன் தன்னால் செய்யக்கூடிய அதி உயர் ஈகையாக ஐ.நா முன்றில் தன்னையே தந்தார் செந்தில்குமரன்.

ராஜீவ்காந்தி கொலை வழக்கில், சாவொறுப்பு வழங்குவதற்கான நாள்குறிக்கப்பட்ட முருகன், சாந்தன், பேரறிவாளன் என்ற தமிழர்களுக்கு நீதி வேண்டி தன்னையே தீயின் நாக்குகளுக்கு இரையாக்கினார் செங்கொடி என்ற வீரத்தமிழச்சி.

"தோழர் முத்துக்குமாரின் உடல் தமிழகத்தை எழுப்பியதுபோல் என்னுடைய உடல் இந்த மூன்று தமிழர்களின் உயிரைக் காப்பாற்றப் பயன்படும் என்ற நம்பிக்கையுடன் செல்கிறேன்" என்ற செங்கொடி அவர்கள், தன்னையே தந்து ஆண்டுகள் பத்து.

இந்த ஈகைப்பேரொளிகளின் இலட்சியக் கனவுகளை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பும் கடமையும் புலம்பெயர்ந்து வாழும் இளையோராகிய எமது கைகளில் இருக்கிறது. இதற்காக ஒன்றுபட்டு உழைப்போம் என்று உறுதி எடுத்துக் கொள்வோம்.

நன்றி,

வணக்கம்.